# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0911/2016/ந

ஆணை எண்: 152/2016

நாள்: 21/09/2016

பல்லவபுரம் நகர குடியிருப்போர்
நலச் சங்கங்களின் இணைப்பு மையம் — மனுதாரர்

நகராட்சி ஆணையர்
பல்லவபுரம் நகராட்சி — எதிர்மனுதாரர்

## ஆணை

23.08.2016 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணையின் போது அரசாணை எண்.1 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் வாரியத்துறை நாள்.02.01.2015–ன் படி கீழ்கட்டளை ஏரி மற்றும் பல்லவபுரம் பெரிய ஏரி ஆகிய இரண்டு ஏரிகளை புனரமைக்க ரூ.22.02 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டும், ஏரிகள் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டிலும், நிர்வாகம் நகராட்சியின் கட்டுப்பாட்டிலும் இருப்பதால் நிதி செலவிடப்படாமலும், ஏரிகள் புனரமைக்கப்படாமலும் உள்ளதெனவும் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் மேற்படி மையத்தின் நிர்வாகிகளால் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இப்பொருள் குறித்து பல்லவபுரம் நகராட்சி ஆணையரிடம் விளக்கம் கோரப்பட்டது. நகராட்சி ஆணையர் தனது குறிப்புரைகளில் மேற்படி ஏரிகளை புனரமைப்பது தொடர்பாக முதன்மைச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களது தலைமையில்

தலைமைப் பொறியாளர், நீர் ஆதாரத்துறை (பொதுப்பணித் துறை) சென்னை மண்டலம் மற்றும் நகராட்சி நிர்வாகத் துறை சென்னை மாநகராட்சி அதிகாரிகளுடனான கலந்தாய்வுக் கூட்டம் 03.08.2015 அன்று நடைபெற்றதெனவும், அக்கூட்டத்தில் நீர்வளத்துறையில் தொழில்நுட்பக் கூறுகளை ஆராய்ந்து எல்லைகளைத் தீர்மானித்து புனரமைக்கவும், பணிகள் முடிவுற்றபின் மேற்படி ஏரிகளை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் பராமரிக்கவும் முடிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஏரிகள் பொதுப்பணித் துறைக்கு சொந்தமானவை என்பதால் மேல் நடவடிக்கைக்காக, புனரமைப்பு பணிகளை நகராட்சி மூலம் மேற்கொண்டிட தடையில்லாச் சான்று வழங்கிட பொதுப் பணித்துறையிடமிருந்து கோரப்பட்டுள்ளதெனவும், பொதுப் பணித்துறையின் அனுமதி இன்னும் வரப்பெறவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக 03.08.2015-ல் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்ட நடவடிக்கைகளைப் பரிசீலித்ததில் மேற்படி ஏரிகளை புனரமைக்கும் பணிகளை நகராட்சி நிர்வாகத் துறைக்குட்பட்ட, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளே நீர் ஆதாரத் துறையின் தொழில் நுட்ப ஒத்துழைப்புடன் மேற்கொண்டிடவும், புனரமைப்பு பணிகள் முடிவுற்றபின் ஏரிகளை / நீர் நிலைகளை உள்ளாட்சியே பராமரிக்கலாமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

காஞ்சிபுரம் பாலாறு கோட்ட நீர் ஆதாரத் துறை செயற்பொறியாளரது 11.01.2016 நாளிட்ட கண்காணிப்பு பொறியாளருக்கு முகவரியிட்ட கடிதத்தில் இப்பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கையில் (DPR) உள்ள தொழில்நுட்ப குறைபாடுகள் குறித்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், இக்கருத்துரு நீர்நிலைகளை பிற நில பயன்பாடுகளாக (பூங்கா /தோட்டம் / பொழுதுபோக்கு இடம் மற்றும் பிற) மாற்றத்தக்கதாக அமைந்துள்ளதால் சட்டதிட்டங்களின்படி தொழில்நுட்ப ரீதியிலும், நிதி நிலைமையிலும் மற்றும் சட்டரீதியாகவும் உகந்ததல்ல எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், பொதுப்பணித்துறையின் நீர் ஆதாரத்துறை அனுபவம் மற்றும் முதுநிலைப் பொறியாளர்களைக் கொண்டதாகவும் நீர் ஆதாரத் திட்டங்களில் நிலையான அமைப்பென்பதாலும் ஒப்பளிக்கப்பட்ட நிதியினை திருத்தப்பட்ட விரிவான திட்ட அறிக்கை ( Revised DPR) தயார் செய்து நீர் ஆதாரத் துறை மூலமே மேற்படி பணிகளை செய்திட ஏதுவாக அத்துறைக்கு செலுத்திடுமாறு கேட்டுக் கொள்ளவும் கருத்துரைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இதனைக் கருத்தில் கொள்ளாமல் நீர் ஆதாரத் துறைக்கு தடையின்மைச் சான்று வழங்கிடக் கேட்டு பல்லவபுரம் நகராட்சி ஆணையரால் நினைவூட்டு (ந.க.எண்.3461/2015/இ1, நாள்.16.08.2016) அனுப்பப்பட்டு வருவது ஏற்புடையதல்ல.

அரசினால் ஒப்பளிக்கப்பட்ட பணிகளை துரிதப்படுத்தவும், ஏற்பளிக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட நிதியினை முறையே செலவிடவும் ஏதுவாக துறைத் தலைவரின் கவனத்திற்கு கொண்டு சென்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடனான கூட்டத்தினைக் கூட்டி உரிய தீர்வு காண்கின்ற வகையில் தக்க துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது.

2016-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 21-ம் நாள் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

ஒம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர் (பொறுப்பு)

பெறுநர்:

1. நகராட்சி ஆணையர்,
   பல்லவபுரம் நகராட்சி,
   குரோம்பேட்டை, சென்னை – 600 044

2. தலைவர்/செயலாளர்,
   பல்லவபுரம் நகர் குடியிருப்போர் நலச் சங்கங்களின் இணைப்பு மையம்,
   பிளாட் எண்: 66, 2வது குறுக்குத் தெரு,
   ஏஜிஎஸ் காலனி, குரோம்பேட்டை, சென்னை–600 044.

நகல்

நகராட்சி நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை –600 005.